# பத்திரிக்கை செய்தி

**மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் புதுவாழ்வு திட்டம் இணைந்து நடத்தும் மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கும் முகாம் நடைபெறுகிறது.**

விருதுநகர் மாவட்டத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் புதுவாழ்வு திட்டம் இணைந்து மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கும் முகாமினை நடத்துகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் 2011 வருடம் முதல் சாத்தூர், வெம்பக்கோட்டை, வத்திராயிருப்பு மற்றும் நரிக்குடி ஆகிய நான்கு ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்படி, மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டை பெற்று தருவதில் 100% இலக்கு அடைவதற்கு புதுவாழ்வு திட்ட களப்பகுதிகளில் தற்போது புதியதாக உருவான மாற்றுத்திறனாளிகளுக்கு கீழ்கண்ட தேதிகளில் அடையாள அட்டை வழங்கும் முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒன்றியம் | முகாம் நடைபெறும் தேதி | நேரம் | முகாம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 1. | சாத்தூர், வெம்பக்கோட்டை | 16.09.2016 | காலை 9.30 மணி முதல் மதியம் 01.00 மணி வரை | புதுவாழ்வு திட்ட படந்தால் களப்பகுதி அலுவலகம் |
| 2. | வத்திராயிருப்பு | 19.09.2016 | காலை 9.30 மணி முதல் மதியம் 01.00 மணி வரை | பதுவாழ்வு திட்ட கோட்டையூர் களப்பகுதி அலுவலகம் |
| 3. | நரிக்குடி | 23.09.2016 | காலை 9.30 மணி முதல் மதியம் 01.00 மணி வரை | நரிக்குடி வட்டார வளர்ச்சி அலுவலகம் |

எனவே இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி தகுதி வாய்ந்த தேசிய அடையாள அட்டை இல்லாத மாற்றுத்திறனாளிகள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.